## வகுப்பு - 10

## இயல் - 4

# செயற்கை நுண்ணறிவு

**(உரைநடை உலகம்)**

**குறுவினா**

1. **வருங்காலத்தில் தேவையெனக் கருதுகின்ற செயற்கை நுண்ணறிவு பொதிந்த இரண்டு அறிவியல் கண்டுபிடிப்புகளைக் குறிப்பிடுக.**
**(எ. கா) செயற்கை நுண்ணறிவால் இயங்கும் போக்குவரத்து ஊர்திகள்.**

- செயற்கை நுண்ணறிவைக் கொண்ட இயந்திரம் மனிதர்களுடன் சதுரங்கம் முதலான விளையாட்டுகளை விளையாடுகிறது.
- கண் அறுவை மருத்துவம் செய்கிறது.
- சமைக்கிறது .
- சில புள்ளிகளை வைத்துப்படம் வரைகிறது.

2. **வேர்டுஸ்மித் என்றால் என்ன?**

- இதழியலில் செயற்கை நுண்ணறிவு குறிப்பிடத் தகுந்த மாறுதல்களைச் செய்துவருகிறது.
- விந்தையான ஒன்று இயல்பான மொழிநடையை உருவாக்குதல் என்னும் மென்பொருள் அதற்கு வேர்டுஸ்மித் (எழுத்தாளி) என்று பெயர் வைத்திருக்கிறார்கள் .
- தகவல்களைக் கொடுத்தால் போதும், வேர்டுஸ்மித் அழகான கட்டுரையைச் சில நொடிகளில் உருவாக்கிவிடும்.

3. **சீனாவில் செயற்கை நுண்ணறிவின் பணி என்ன?**

- 2016 இல் ஐ.பி.எம். நிறுவனத்தின் செயற்கை நுண்ணறிவுக் கணினியான வாட்சன் சில நிமிடங்களில் இரண்டு கோடித் தரவுகளை அலசி, நோயாளி ஒருவரின் புற்றுநோயைக் கண்டுபிடித்தது.
- சீனாவின் ஐம்பதுக்கும் மேற்பட்ட மருத்துவமனைகள் இயந்திர மனிதர்களைப் பணிக்கு அமர்த்தியுள்ளன.
- அங்கு வரும் நோயாளிகளின் குரலையும் முகத்தையும் அடையாளம் கண்டு அவர்களின் கேள்விகளுக்குப் பதில் சொல்கின்றன.
- சீன மொழியின் வெவ்வேறு வட்டார வழக்குகளையும்கூட அவை புரிந்து கொண்டு பதில் அளிக்கின்றன.

**சிறுவினா**

***1. இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுதுகின்றனவா என்பது குறித்த சிந்தனைகளை முன்வைத்து எழுதுக.***

***செயற்கை நுண்ணறிவின் பொதுவான கூறுகள்:***

- *ஆம் இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றன வளப்பத்துகின்றன என்றே கூறலாம்.*
- *அறிவியல் என்னும் ஒற்றை வார்த்தையில் இந்த உலகம் இயங்குகிறது என்றே கூறவேண்டும்.*
- *நமது அன்றாட தேவைகளுக்கும் வாழ்க்கை முறைகளிலுமே அறிவியல் பயன்பாடு அதிகரித்து வருகிறது.*
- *வீட்டு உபயோகப் பொருட்களில் தொடங்கி கணினி, செயற்கை நுண்ணறிவு தொலைபேசி,ரோபோ என இன்று அறிவியல் கண்டுபிடிப்புகள் ஏராளம்.*
- *கல்வித்துறையில் மின்னனுக் கல்வியறிவையும் புகுத்தி புது புரட்சியை ஏற்படுத்தியுள்ளது.*
- *மருத்துவ அறிவியல் கண்டுபிடிப்புகள் பல வித நோய்களை அறிந்து சிகிக்சைப் பெற உதவுகிறது.*
- *அறிவியல் கண்டுபிடிப்புகள் மனித வாழ்வில் புதிய மாற்றங்களை செய்து வருகிறது. இப்படி உலகின் எல்லா மூலைகளிலும் அறிவியல் கண்டுபிடிப்புகள். மனித வாழ்வை வளப்படுத்தி வருகின்றது.*
- *தொழில் நுட்பத்தின் வளர்ச்சி உச்சத்தை அடைந்து நமது வாழ்க்கையையும் வணிகத்தையும் நம்மை அறியாமலேயே மேன்மைப்படுத்துகின்றன என்பது உண்மையே என்று கூறலாம்.*

***2. செயற்கை நுண்ணறிவு என்றால் என்ன?***

- *செயற்கை நுண்ணறிவு என்பது ஒரு மென்பொருள் அல்லது கணினிச் செயல்திட்ட வரைவு எனலாம்.*
- *அது தானாகக் கற்றுக் கொள்ளக்கூடியது.*
- *இந்த அறிவைக் கொண்டு தனக்கு வரும் புதியபுதிய சூழ்நிலைகளில் மனிதரைப்போல தானே முடிவெடுக்கும் திறனுடையது.*
- *ஒளிப்படங்கள், எழுத்துகள், காணொளிகள், ஒலிகள் போன்றவற்றிலிருந்து கற்றுக்கொள்ளும் இயல்புடைய மென்பொருளை ஆராய்ச்சியாளர் வடிவமைக்கிறார்.*
- *கற்றுக் கொண்டதை அந்த இயந்திரம் தேவைப்படும் இடங்களில் தேவைப்படும் நேரங்களில் செயல்படுத்தும்.*

**3. மெய்நிகர் உதவியாளர் யார்?**

- திறன்பேசிகளில் இயங்கும் உதவும் மென்பொருள் கண்ணுக்குப் புலப்படாத மனிதனைப்போல நம்முடன் உரையாடி, சில உதவிகள் செய்கின்றது.
- நாம் சொல்கிறவர்களுக்குத் தொலைபேசி அழைப்பு விடுக்கும்.
- நாம் திறக்கக் கட்டளையிடுகிற செயலியைத் திறக்கும். நாம் கேட்டதை உலாவியில் தேடும்.
- நாம் விரும்பும் அழகான கவிதையை இணையத்தில் தேடித் தரும்.
- எந்தக் கடையில் எது விற்கும் என்று சொல்லும், படிப்பதற்கு உரிய நூல்களைப் பட்டியலிடும்.
- நாம் எடுத்த ஒளிப்படங்களைப் பற்றிக் கருத்துரைக்கும்.
- எதிர்காலத்தில் உங்கள் நெருங்கிய நண்பர்கள் குடும்பத்தினர் ஆகியோரை விடவும் இதுபோன்ற மெய்நிகர் உதவியாளர் உங்களை நன்கு அறிந்தவர்களாக இருக்கும்.

**4. ஒளிப்படக்கருவியில் செயற்கை நுண்ணறிவின் பணி யாது?**

- தற்போது வெளிவருகின்ற சில உயர்வகைத் திறன்பேசியின் ஒளிப்படக்கருவி, செயற்கை நுண்ணறிவுத் தொழில் நுட்பத்தைக் கொண்டிருக்கிறது.
- கடவுச் சொல்லும் கைரேகையும் திறன் பேசியைத் திறப்பது பழமையானது.
- உரிமையாளரின் முகத்தை அடையாளம் கண்டு திறப்பது.
- இன்றைய தொழில்நுட்பம் இது படம் எடுக்கும் காட்சியை அடையாளம் கண்டு அதற்கு ஏற்பத் தன்னைத் தகவமைத்துக் கொள்கிறது.
- திறன்பேசிகளில் உள்ள ஒளிப்படக் கருவியில் எடுக்கும் படங்களை மெருகூட்ட இத்தொழில்நுட்பம் உதவுகிறது.
- காணொலிகளைத் தொகுக்கும் மென் பொருள்களில் இன்றைக்குச் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம் பயன்படுகிறது.
- இதன் மூலம் நேரம் வீணாவது தவிர்க்கப்படுகிறது.

**5. வாடிக்கையாளர் சேவையில் செயற்கை நுண்ணறிவின் பங்கு என்ன?**

- இந்தியாவின் பெரிய வங்கியான பாரத ஸ்டேட் வங்கி 'இலா' என்னும் உரையாடு மென்பொருளை உருவாக்கியிருக்கிறது.
- ஒரு வினாடிக்குப் பத்தாயிரம் வாடிக்கையாளர்களுடன் அது உரையாடும் வங்கிக்கு வரும் வாடிக்கையாளருக்குக் கிடைக்கும் சேவைகளை அது இணையம் மூலம் அளிக்கிறது.
- செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த இந்திய வங்கிகள் ஆயத்தமாகி வருவதற்கு இந்த 'இலா' பயன்படுகிறது.

***6. பெப்பர் ரோபோ எப்படிப் பயன்படுகிறது?***

- *ஜப்பானில் சாப்ட்வங்கி உருவாக்கிய இயந்திர மனிதனே பெப்பர்.*
- *இது உலக அளவில் விற்பனையாகும் ஒரு ரோபோ. வீட்டுக்கு, வணிகத்துக்கு, படிப்புக்கு என்று மூன்று வகை ரோபோக்கள் கிடைக்கின்றன.*
- *இவை மனிதரின் முகபாவனைகளிலிருந்து உணர்வுகளைப் புரிந்துகொண்டு அதற்கேற்பச் செயல்படுகிறன.*
- *பெப்பரை வரவேற்பாளராகவும் பணியாளராகவும் வீடுகளிலும் வணிக நிறுவனங்களிலும் உணவு விடுதிகளிலும் பயன்படுத்துகிறார்கள்.*

Pinkz Public School
Next Generation School

# பெருமாள் திருமொழி ( குலசேகராழ்வார்

**(கவிதைப்பேழை)**

## குறுவினா

**1. மருத்துவத்தில் மருந்துடன் அன்பும் நம்பிக்கையும் ஆற்றும் பாங்கினை எழுதுக.**

- *மருத்துவர் உடலில் ஏற்பட்ட புண்ணைக் கத்தியால் அறுத்துச் சுட்டாலும் அது நன்மைக்கே என்று உணர்ந்து நோயாளி அவரை நேசிப்பார்.*
- *வித்துவக்கோட்டில் எழுந்தருளியிருக்கும் அன்னையே! அதுபோன்று நீ உனது விளையாட்டால் நீங்காது துன்பத்தை எனக்குத் தந்தாலும் உன் அடியவனாகிய நான் உன் அருளையே எப்பொழுதும் எதிர்பார்த்து வாழ்கின்றேன்.*

**2. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் நூல்குறிப்பு தருக.**

- *நாலாயிரத் திவ்வியப் பிரபந்தின் முதலாயிரத்தில் 691 ஆவது பாசுரம். பாடப்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளது.*
- *பெருமாள் திருமொழி நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் ஐந்தாம் திருமொழியாக உள்ளது, இதில் 105 பாடல்கள் உள்ளது.*
- *இதனை பாடியவர் குலசேகராழ்வார். இவரின் காலம் எட்டாம் நூற்றாண்டு.*

## சிறுவினா

**1. மாளாத காதல் நோயாளன் போல் என்னும் தொடரிலுள்ள உவமை சுட்டும் செய்தியை விளக்குக.**

- *மருத்துவர் உடலில் ஏற்பட்ட புண்ணைக் கத்தியால் அறுத்துச் சுட்டாலும் அது நன்மைக்கே என்று உணர்ந்து நோயாளி அவரை நேசிப்பார். அதுபோல*
- *நீ உனது விளையாட்டால் நீங்காத துன்பத்தை எனக்குத் தந்தாலும் உன் அடியவனாகிய நான் உன் உனது அருளையே எப்பொழுதும் எதிர்பார்த்து வாழ்கின்றேன் என்கிறார் குலசேகராழ்வார்.*

**2. பக்தி இலக்கியங்களில் எவ்வாறு அறிவியல் கருத்துகள் செறிந்திருந்தன?**

- *தமிழர், பண்டைய நாட்களிலிருந்தே அறிவியலை வாழ்வியலோடு இணைத்துக் காணும் இயல்புடையவர்களாக இருக்கிறார்கள்.*
- *அதன்விளைவாக, சங்க இலக்கியத்தில் அறிவியல் கருத்துகள் நிறைந்துள்ளன.*
- *இணையாகப் பக்தி இலக்கியங்களிலும் அறிவியல் கருத்துகள் செறிந்திருக்கின்றன.*

**கவிதைப்பேழை**

**பரிபாடல்** *( கீரந்தையார் )*

**சிறுவினா**

***1. உயிர்கள் உருவாகி வளர ஏற்ற சூழல் பூமியில் எவை எவையெனப் பரிபாடல் வழி அறிந்தவற்றைக் குறிப்பிடுக.***

- *எதுவுமேயில்லாத பெருவெளியில் அண்டத் தோற்றத்துக்குக் காரணமாக கரு (பரமாணு) பேரொலியுடன் தோன்றியது.*
- *உருவம் இல்லாத காற்று முதலான பூதங்களின் அணுக்களுடன் வளர்கின்ற வானம் என்னும் முதல் பூதத்தின் ஊழி அது.*
- *அந்த அணுக்களின் ஆற்றல் கிளர்ந்து பருப்பொருள்கள் சிதறும்படியாகப் பல ஊழிக் காலங்கள் கடந்து சென்றன.*
- *பிறகு நெருப்புப் பந்துபோலப் புவி உருவாகி விளங்கிய ஊழிக்காலம் தொடர்ந்தது.*
- *பூமி குளிரும்படியாகத் தொடர்ந்து மழை மொழிந்த ஊழிக்காலம் கடந்தது.*
- *அவ்வாறு தொடர்ந்து பெய்த மழையால் பூமி வெள்ளத்தில் மூழ்கியது.*
- *மீண்டும் மீண்டும் நிறை வெள்ளத்தால் நிறைந்த இப்பெரிய உலகத்தில்,உயிர்கள் உருவாகி வாழ்வதற்கு ஏற்ற சூழல் தோன்றியது.*
- *அச்சூழலில் உயிர்கள் தோன்றி நிலைபெறும்படியான ஊழிக்காலம் வந்தது.*

***2. அமெரிக்க வல்லுநர் எட்வின் ஹப்பிள் பால்வீதி பற்றி கூறுவது என்ன?***

*இந்த அண்டப் பெருவெளியில் நம் பால்வீதி போன்ற எண்ணற்ற பால்வீதிகள் உள்ளன. வெளியே நின்று பார்த்தோமெனில், சிறுதூசிபோலக் கோடிக்கணக்கான பால்வீதிகள் தூசுகளாகத் தெரியும் என்றும் நம் பால்வீதி போன்று பல பால்வீதிகள் உள்ளன என்றும் நிரூபித்தார்.*

***3. திருவாசகத்தில் கூறப்பட்டு உள்ள பால்வீதி செய்திகள் யாவை?***

*1300 ஆண்டுகளுக்கு முன் மாணிக்கவாசகர் திருஅண்டப் பகுதியில் இவ்வாறு எழுதுகிறார்.*

***"அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்***

**.........................................................................**

***சிறிய ஆகப் பெரியோன் தெரியின்"***

*அண்டப் பகுதிகளின் உருண்டை வடிவம், ஒப்பற்ற வளமையான காட்சியும் ஒன்றுக்கு ஒன்று ஈர்ப்புடன் நின்ற அழகினைச் சொல்வது எனின், நூருகோடிக்கும் மேல் விரிந்து நின்றன. இல்லத்துள் நுழையும் கதிரவனின் ஒளிக் கற்றையில் தெரியும் தூசுத் துகள்போல அவை நுண்மையாக இருக்கின்றன.*

# இலக்கணம் – பொது

**சான்று தருக**

1. **தன்மை வினைகள்**

அ. வந்தாய், வந்தீர்  
ஆ. வந்தேன், வந்தோம்  
இ. சென்றான், சென்றார்  
ஈ. சென்றாய், சென்றீர்

2. **முன்னிலைப் பெயர்கள்**

அ. நாம், நாங்கள்  
ஆ. அவன், அவர்கள்  
இ. நீ, நீங்கள்  
ஈ. நான், யான்

3. **படர்க்கை வினைகள்**

அ. வந்தான், சென்றான்  
ஆ. வந்தான், சென்றாய்  
இ. வந்தீர், சென்றீர்  
ஈ. சென்றோம், கண்டோம்

4. **இட வழு**

அ. நீ நீந்தினேன்  
ஆ. நீ நீந்தினாய்  
இ. நீ நீந்துகின்றாய்  
ஈ. நீ நீந்துவாயா

5. **மரபு வழு**

அ. ‘தென்னை மரங்கள் உள்ள பகுதியைத் தென்னந்தோப்பு என்று கூறுதல்.

ஆ. சவுக்கு மரங்கள் உள்ள பகுதியைத் சவுக்குத்தோப்பு என்று கூறுதல்.

இ. ‘தென்னை மரங்கள் உள்ள பகுதியைத் தென்னந்தோட்டம் என்று கூறுதல்.

ஈ. ‘வாழை மரங்கள் உள்ள பகுதியை வாழைத்தோட்டம் என்று கூறுதல்.

6. **பால் வழுவமைதி**

அ. பசுவை, ‘என் அம்மை வந்தாள் ‘என்று கூறுதல்.

ஆ. பூனையார் பால்சோற்றைக் கண்டதும் வருகிறார் என்று கூறுதல்

இ. “வாடா இராசா, வாடா கண்ணா” என்று தன மகளைப் பார்த்துத் தாய் அழைத்தல்.

ஈ. குயில் கூவும் என்பதனைக் ‘கத்துக் குயிலோசை’ என்று பாரதியார் பாடலில் இடம்பெற்றுள்ளது.


Created by Pinkz

7. **வினா வழாநிலை**

அ. ஒரு விரலைக் காட்டி 'எது சிறியது? எது பெரியது?' என்று கேட்டல்.

ஆ. இரு விரலைக் காட்டி 'எது சிறியது? எது பெரியது? என்று கேட்டல்.

இ. அங்கே கிடப்பது கட்டையா? மனிதனா?

ஈ. அங்கே வருகிறவன் ஆணா? பெண்ணா?

8. **திணை வழாநிலை**

அ. செழியன்ன வந்தது
ஆ. செழியன் வந்தான்
இ. செழியன் வந்தாள்
ஈ. வந்தாள் செழியன்

## நிரப்புக

1. **பால் என்பது திணையின் உட்பிரிவு ஆகும். இஃது ______ வகைப்படும்.**

அ. இரண்டு ஆ. ஒன்று இ. நான்கு ஈ. ஐந்து

2. **பால் என்பதற்கு ________ என்பது பொருள்.**

அ. ஒழுக்கம் ஆ. பகுப்பு இ. சத்துப்பொருள் ஈ. எண்

3. **இலக்கண முறையுடன் பிழையின்றிப் பேசுவதும் எழுதுவதும் ______ எனப்படும்.**

அ. வழு ஆ. வழாநிலை இ. வழுவமைதி ஈ. செய்யுள்

4. **இலக்கண முறையின்றிப் பேசுவதும் எழுவதும் ________ எனப்படும்.**

அ. செய்யுள் ஆ. வழுவமைதி இ. வழு ஈ. வழாநிலை

5. **கண்ணன் எங்கே இருக்கிறார்? என்ற வினாவிற்குக் 'கண்ணன் வீட்டிற்குள் இருக்கிறார்' என்று விடையளித்தல் __________ வழு.**

அ. கால வழு ஆ. இட வழு இ. திணை வழு ஈ. விடை வழு

6. **வழா நிலை _______ வகைப்படும்.**

அ. ஏழு ஆ. எட்டு இ. பத்து ஈ. பதினாறு

7. **தென்னை மரங்கள் உள்ள பகுதியைத் தென்னந்தோப்பு என்று கூறுதல் _______ வழாநிலை.**

அ. இட ஆ. மரபு இ. கால ஈ. விடை

8. **குடியரசுத் தலைவர் நாளை தமிழகம் வருகிறார்_______ வழுவமைதி.**

அ. திணை ஆ. பால் இ. இட ஈ. கால

9. **"கத்துங் குயிலோசை – சற்றே வந்து**

**காதிற் படவேணும்"_________ வழுவமைதி.**

அ. திணை ஆ. மரபு இ. இட ஈ. பால்

10. **திணை வழுவமைதி -**

அ. 'இந்தப் பாப்பா தூங்கமாட்டாள்' என்று தன்னையே குழந்தையாக குறிப்பிடுவது.

ஆ. 'வாடாச் செல்வம்' என்று தாய் மகளை அழைப்பது.

இ. 'என் தங்கை வந்தாள்' என்று பசுவைக் குறிப்பிடுவது

ஈ. இரவெல்லாம் நாய் காத்திக்கொண்டே இருந்தது.

11. **'என் அம்மை வந்தாள்' என்று மாட்டை பார்த்துக் கூறுவது______ .**

அ. பால் வழுவமைதி ஆ. திணை வழுவமைதி

இ. இட வழுவமைதி ஈ. வழாநிலை

12. **தென்னை மரங்கள் உள்ள பகுதியை 'தென்னந்தோட்டம்' என்று கூறுவது______ .**

அ. இட வழு ஆ. வினா வழு

இ. மரபு வழு ஈ. கால வழு

13. **இரு விரல்களைக் காட்டி 'எது சிறியது? எது பெரியது? என்று கேட்டால்_____ .**

அ. விடை வழாநிலை ஆ. வினா வழாநிலை

இ. இட வழாநிலை ஈ. திணை வழாநிலை

14. **"வாடா இராசா, வாடா கண்ணா" என்று தன் மகளைப் பார்த்துத் தாய் அழைப்பது_____ .**

அ. திணை வழுவமைதி ஆ. கால வழுவமைதி

இ. இட வழுவமைதி ஈ. பால் வழாநிலை

15. **இலக்கண ஆசிரியகளால் ஏதேனும் ஒரு காரணம் கருதி 'பிழையன்று' என ஏற்றுக் கொள்ளபடுவது**

அ. திணை வழு ஆ. மரபு வழாநிலை

இ. வழுவமைதி ஈ. மரபு வழு

## இலக்கண குறிப்பு தருக

1. **செழியன் வந்தது _______**

அ. திணை வழு　　ஆ. பால் வழு　　இ. வினா வழு　　ஈ. விடை வழு

2. **நான் வந்தான் _______**

அ. திணை வழு　　ஆ. இட வழு　　இ. பால் வழு　　ஈ. கால வழு

3. **கிளியோரே தூது செல்வீர் _________**

அ. பால் வழு　　ஆ. திணை வழு

இ. கால வழு　　ஈ. திணைவழுவமைதி

4. **கண்ணகி உண்டாள்**

அ. அவள் பாடினான்　　ஆ. கந்தன் உண்டாள்

இ. கண்ணகி உண்டாள்　　ஈ. அவை பறந்தது.

5. **'நேற்று வருவாள்' என்று கூறுவது __________**

அ. திணை வழு　　ஆ. கால வழு

இ. இட வழு　　ஈ. மரபு வழு

## கூறியவாறு செய்க.

1. **நீ வந்தேன் – இடவழாநிலையாக்குக.**

அ. நீ வந்தோம்　　ஆ. நீ வந்தாய்

இ. நீ வருவான்　　ஈ. நீ வந்தான்

2. **நாய் கத்தும் – வழா நிலையாக்குக.**

அ. நாய் பேசும்　　ஆ. நாய் உறுமும்

இ. நாய் குரைக்கும்　　ஈ. நாய் ஊளையிடும்

3. **பூனை வந்தாள் – வழா நிலையாக்குக.**

அ. பூனை வந்தது　　ஆ. பூனை வந்தன

இ. பூனைகள் வந்தது　　ஈ. எதுவுமில்லை

Next Generation School

4. **நடந்தாய் – என்பதனைப் படர்க்கை வினையாக மாற்றுக.**

அ. நடந்தேன் ஆ. நடந்தோம்

இ. நடந்தான் ஈ. நடந்தீர்

5. **பசுமாடு வந்தது – திணை வழுவமைதியாக்குக.**

அ. பசு வந்தது ஆ. மாடு வந்தது

இ. என் அம்மை வந்தாள் ஈ. பசுமாடு வந்தாள்

6. **குழந்தை அழுகிறான், பார். வழாநிலையாக மாற்றுக.**

அ. குழந்தை அழுகிறார்கள், பார். ஆ. குழந்தை அழுகிறார், பார்.

இ. குழந்தை அழுகிறாள், பார். ஈ. குழந்தை அழுகிறது, பார்.

7. **மயில் கூவும் (மரபு வழாநிலை ஆக்குக)**

அ. மயில் அகவும் ஆ. மயில் கீச்சிடும்

இ. மயில் பேசும் ஈ. மயில் கத்தும்

8. **இதோ முடித்துவிடுவேன் (வழுவமைதியாக மாற்றுக)**

அ. இதோ முடிக்கபோகிறேன் ஆ. இதோ முடித்தாயிற்று

இ. இதோ முடித்துவிட்டான் ஈ. இதோ முடித்துவிட்டேன்

Next Generation School